# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education – Northern Province

**இரண்டாம் தவணைப் பரீட்சை – 2022**

**வரலாறு – I**

| பெயர் / சுட்டெண் :- ………………… | தரம் :- 10 | நேரம் :- 1 மணித்தியாலம் |
|---|---|---|

**கவனிக்க :**
- **எல்லா** வினாக்களுக்கும் விடை தருக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப்பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடி (×) இடுக.

## வரலாறு - I

01. வம்சத்தப்பகாசினி பற்றிய சரியான கூற்றாக அமைவது

(1) மகாவம்சத்திற்கு அடிப்படையாக அமைந்த நூலாகும்.

(2) மகாவம்திற்கு எழுதப்பட்ட உரைநூலாகும்.

(3) தீபவம்சத்திற்கு எழுதப்பட்ட உரைநூலாகும்.

(4) தீபவம்சத்திற்கு அடிப்படையாக அமைந்த நூலாகும்.

02. சித்தாரும்பி புத்தநாயக்க என்னும் அதிகாரிக்கு நன்றிக் கடனாக வழங்கப்பட்ட பரிசில்கள், சலுகைகள் பற்றிய தகவல்கள் இடம்பெறும் ஆதாரமாக அமைவது

(1) பனாகடுவ செப்பேடு (2) வல்லிபுர பொற்சாசனம்

(3) அம்பகமுவ கல்வெட்டு (4) கல்பொத்த கல்வெட்டு

03. புராதன கால சமூக வரலாறு, குடியேற்றங்களின் பரம்பல் என்பவற்றை அறிந்து கொள்ள எமக்கு உதவுபவை

(1) சிதைவுகள் (2) நாணயங்கள் (3) கல்வெட்டுக்கள் (4) செதுக்கல்கள், சித்திரங்கள்

04. கி.பி.5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இலங்கைப் பெண்களின் ஆடை, ஆபரணங்கள், கூந்தல் அலங்காரம், அவர்கள் மேற்கொண்ட அலங்காரக்கலை நுட்பம் என்பவற்றை அறிந்து கொள்ள எமக்கு உதவுவது

(1) இலங்கையர்களால் எழுதப்பட்ட நூல்களும் அறிக்கைகளும்

(2) மன்னர்களால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்கள்

(3) தீவின் பல பகுதிகளிலும் கிடைத்துள்ள சிதைவுகள்

(4) சீகிரியா சுவர் ஓவியங்கள்

05. தனது அனுபவத்திலிருந்து கண்டி இராச்சியம் தொடர்பான தகவல்களைக் கொண்ட நூலொன்றை எழுதியவர்

(1) பிலிப்பஸ் பல்டியஸ்
(2) றொபட்நொக்ஸ்
(3) ஜோவாவோ ரிபைரோ
(4) பர்னாவோ டீ. குவேரோஸ்

06. இலங்கையின் தேசிய மரபு ரீதியான தொல்பொருட்களை பின்வருவனவற்றுள் எந்தக் காரணத்திற்காகப் பாதுகாக்க வேண்டும்.

(1) எதிர்கால சந்ததியினருக்குக் காட்ட வேண்டுமென்பதால்.
(2) சுற்றலாத்துறையின் முன்னேற்றத்திற்கு காரணமாக அமைவதனால்.
(3) இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக் காட்டக் காரணமாக இருப்பதால்.
(4) கடந்தகால ஆட்சியாளர்களின் செயற்பாடுகள் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதனால்

07. வரலாற்றுக்கு முற்பட்டகால மக்களின் தொழிநுட்ப அறிவினைப் பறைசாற்றும் பிரதான சான்றாக அமைவது

(1) சிறு கல்லாயுதங்கள்
(2) சிற்றணைக்கட்டுக்கள்
(3) சிறு வீடுகள்
(4) சிறு குளங்கள்

08. நிரல் ‘அ’ வில் வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதர்கள் வாழ்ந்த பிரதேசங்களும் நிரல் ‘ஆ’ வில் அவற்றுக்கான உதாரணங்களும் தரப்பட்டுள்ளன அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் வரும் விடை

| **நிரல் ‘அ’** | **நிரல் ‘ஆ’** |
|---|---|
| 1 கரையோர வெட்டவெளி | A பட்டதொம்பலென |
| 2 தாழ்நில ஈரவலயக் குகை | B ஹோட்டன் சமவெளி |
| 3 ஈரவலய வெட்டவெளி | C மினிஹாகல்கந்த |
| 4 தாழ்நில உலர்வலயக் குகை | D பெல்லன்பதி பெலஸ்ஸ |
| | E சீகிரிய பொத்தான |

(1) CEBD (2) CADE (3) DBEA (4) CEBA

09. இலங்கையின் முன்வரலாற்றுக்கால பண்பாட்டைக் கற்பதற்கான பிரதான ஆதாரமாக அமைவது

(1) உடரஞ்சாமடம வீட்டின் சிதைவுகள்
(2) நிறந்தீட்டப்பட்ட மட்பாண்டம்
(3) மெகாலிதிக் மயானங்கள்
(4) சமனலவெவ இரும்புருக்குச் சூளை

10. வரலாற்றுக் காலத்தில் கசீகாரகாம, மணிகார காம, கோபால காம, கேவட்ட காம என்பவற்றால் குறிப்பிடப்பட்டவை .

(1) தொழில் ரீதியான கிராமங்கள் (2) குளத்தை மையமாகக் கொண்ட கிராமங்கள்

(3) பெரிய நகரக் குடியேற்றங்கள் (4) செயற்பாடுகளின் அடிப்படையிலான கிராமங்கள்

11. கி.மு. 250ஆம் ஆண்டளவில் எழுதப்பட்ட பிராமிக் கல்வெட்டில் பிரதான கட்டடக் கலைஞரைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட சொல்

(1) “அடிக” (2) “மஹலேகம்” (3) “புரகமத்த” (4) “தண்டநாயக”

12. புராதன கால கல்வெட்டொன்றில் “தொட்டபோஜக” என்னும் பெயரால் குறிப்பிடப்பட்டுள்ளவரின் பணியாக அமைவது

(1) நாட்டை நிர்வகித்தல் (2) நகரை நிர்வகித்தல்

(3) பிரதேசத்தை நிர்வகித்தல் (4) படகுத்துறையை நிர்வகித்தல்

- **பின்வரும் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு 13ஆம், 14ஆம் வினாக்களுக்கு விடை தருக.**

A – தனது பத்தாவது ஆட்சி ஆண்டில் கிராமங்களுக்கு எல்லைகளை வகுத்தல்.

B – சத்திரிய குல முறைப்படி இரண்டாவது தடவையாகவும் முடிசூடிக் கொள்ளுதல்.

C – தனது தந்தையான காவந்தீச மன்னனின் வழிகாட்டலின்படி செயலாற்றுதல்.

D – நாட்டின் தேசிய வருமானத்தை அதிகரிப்பதற்காக வரி அறவிடும் முறையை ஒழுங்குபடுத்துதல்

E – பத்தினித் தெய்வக் கோயில் திறப்பு விழாவிற்காக இந்தியாவின் சேர நாடு செல்லல்

13. B என்னும் கூற்றோடு தொடர்புடைய மன்னர் குறித்த சரியான கூற்றாக அமைவது

(1) பாரிய குளங்களை முதலில் அமைத்தல் (2) முதலாவது பௌத்த மன்னனாதல்

(3) அந்நிய ஆக்கிரமிப்புக்களை முறியடித்தல் (4) பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தல்

14. D.E என்னும் கூற்றுக்களோடு தொடர்புடைய வம்சமாக அமையக்கூடியது

(1) இலம்பகர்ண வம்சம் (2) கலிங்க வம்சம்

(3) பாண்டிய வம்சம் (4) மௌரிய வம்சம்

15. கப்பல் விபத்துள்குள்ளாகி இலங்கைக் கரையை வந்தடைந்த றொபட்நொக்ஸ் உட்பட்ட குழுவினரை சிறையிலடைத்த கண்டி மன்னன்

(1) 1ஆம் விமலதர்மசூரியன் (2) செனரத் (3) 1ஆம் இராஜசிங்கன் (4) 2ஆம் இராஜசிங்கன்

16. பின்வருவோரில் பாரம்பரிய அரசுரிமையின்படி ஆட்சியதிகாரத்தை **பெற்றுக்கொள்ளாத** மன்னராகக் கருதப்படக்கூடியவர்

(1) தாதுசேனன் (2) 1ஆம் முகலன் (3) 1ஆம் காசியப்ப (4) வங்கநாசிக்க திஸ்ஸ

17. முதலாம் விஜயபாகு பொலநறுவையைத் தலைநகராக்குவதில் செல்வாக்குச் செலுத்திய துறைமுகம் எனக் கருதக்கூடியது

(1) மகாதீத்த (2) பல்லவங்க (3) லங்காபட்டுன (4) கோகர்ண

18. புராதன காலத்தில் வழக்கங்கள், மரபு முறைகள் தொடர்பான அதிகாரிக்கு வழங்கப்பட்ட பெயர்

(1) படகாரிக (2) கொதுறு கேனா (3) பனபெடிக (4) மஹலேகம்

19. நிரல் ‘அ’ வில் இலங்கையின் பல்வேறு இடங்களில் பொறிக்கப்பட்ட கல்வெட்டுக்களும் நிரல் ‘ஆ’ அவற்றில் குறிப்பிடப்பட்ட கைத்தொழில் கைவினைஞர்களும் தரப்பட்டுள்ளன அவற்றைச் சரியாகத் தொடர்புபடுத்தினால் வரும் விடை

| **நிரல் ‘அ’** | **நிரல் ‘ஆ’** |
|---|---|
| 1 பொலநறுவை முதுகல்ல கல்வெட்டு | A தடிக |
| 2 அம்பாந்தோட்டை மண்டகல கல்வெட்டு | B மணிகர |
| 3 கண்டி வேகிரிய தேவாலய கல்வெட்டு | C துலாதார |
| 4 அம்பாந்தோட்டை வெஹெரகெம கல்வெட்டு | D ததவய |
| | E கபர |

(1) CEBD (2) CABE (3) DCEA (4) ECAD

20. தலைமைப்பிக்குவை அண்டி வாழும் மாணவப் பிக்குகளுக்கு வழங்கப்பட்ட பெயர்

(1) ‘‘சதிவிஹரிய’’ (2) ‘‘அந்தேவாசிப் பிக்குகள்’’

(3 ‘‘தீக பாணக’’ (4) ‘‘சங்யுக்த பாணக’’

21. விவசாய நடவடிக்கைகளின் போது மூன்றாவது போகம் (இடைப்போகம்) பின்வரும் எக்காரணியினால் தீர்மானிக்கப்பட்டது

(1) விவசாயிகளின் ஆர்வம் (2) அரசின் அனுசரணை

(3) மக்களின் உணவுத்தேவை (4) நீர் கிடைப்பனவின் தன்மை

22. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தாளத்துடன் பாடக்கூடிய கற்பாறையில் பொறிக்கப்பட்ட கவிதை காணப்படும் இடம்

(1) அனுராதபுர அபயகிரி (2) கிரிந்த பன்சலை

(3) ரஜகல ஆராமைத் தொகுதி (4) அனுராதபுர மிரிசவெட்டிய

23. புராதன இலங்கையில் ஒற்றுமையுடன் வாழ்ந்ததாகக் கூறப்படும் காம்போஜர்கள், ஜாவகர்கள், அயோனியர்கள் ஆகியோராது தாய்நாடுகள் **முறையே**

(1) ஆப்கானிஸ்தான், பாரசீகம், அரேபியா (2) மலாக்கா குடாநாடு, பாரசீகம், உரோம்

(3) ஆப்கானிஸ்தான், தென்னிந்தியா, சீனா

(4) ஆப்கானிஸ்தான், மலாக்கா குடாநாடு, கிரேக்கம் மற்றும் மெசிடோனியா

24. புனித வெள்ளரசு மரக்கிளை கொண்டுவரப்பட்டமை, புனித தந்ததாது கொண்டு வரப்பட்டமை என்பவற்றோடு தொடர்புடைய துறைமுகங்கள் **முறையே**

(1) ஜம்புகோளப்பட்டினம், லங்காபட்டினம் (2) லங்காபட்டினம், ஜம்புகோளப்பட்டினம்

(3) மகாதீத்த, கோகண்ணதீத்த (4) பல்லவங்க, கொடவாய

25 பின்வருவனவற்றுள் சேனைப்பயிர்ச்செய்கையோடு **தொடர்புபடாத** சொல்லாக அமைவது

(1) ‘‘கனத்த’’ (2) ‘‘தண்டுவெட்ட’’ (3) ‘‘கெத’’ (4) ‘‘பெல’’

26. எமது மூதாதையர்களால் பின்வரும் எக்காலப் பகுதியில் நில அளவை முறைகள் தயாரிக்கப்பட்டன

(1) வேடுவர் யுகம் (2) விவசாய யுகம் (3) அடிமை யுகம் (4) நவீன யுகம்

27. அம்பன்கங்கைக்கு குறுக்கே அணைகட்டி அமைக்கப்பட்ட எலஹரக் கால்வாய் மூலம் நீரைப்பெற்றுக்கொள்ளும் குளங்களுள் **உள்ளடங்காதது**

(1) மின்னேரியா (2) கவுடுளுவாவி (3) கிரித்தலைவாவி (4) குருளுவாவி

28. புராதன கால கிராம மக்கள் தாம் எதிர்கொண்ட நீர்ப்பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு பின்பற்றிய வழிமுறைகளுள் **மிகப்** பொருத்தமானது

(1) தனித்தனியாக இருக்கும் குளங்களை கால்வாய்கள் மூலம் ஒன்றிணைத்தல்
(2) ஆறுகளுக்கே பாரிய குளங்களை அமைத்தல்
(3) பாரிய குளங்களை உருவாக்குதல்
(4) ஆறுகளுக்கு அருகிலே குடியேற்றங்களை அமைத்தல்

29. மகாவாவிகளை அமைக்கும் போது கருத்திற் கொண்ட விடயங்களுள் **முதன்மையானது**

(1) நீண்ட நாட்களுக்கு வேலை வழங்கும் தன்மையை
(2) நீண்ட தூரத்திற்கு நீரைக் கொண்டு செல்லும் தன்மையை
(3) நீண்ட காலம் நிலைத்திருக்கும் தன்மையை
(4) நீண்ட புகழைப்பெறும் தன்மையை

30. கி.பி 9ஆம் நூற்றாண்டில் பொறிக்கப்பட்ட கல்வெட்டில் சந்திரப்பிறை குறிக்கும் கருத்தாவது

(1) தூய்மை (2) நிலைத்த தன்மை (3) மறுபிறப்பு (4) அரசாண்மை

- கீழே தரப்பட்ட A, B என்ற கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு 31ஆம் 32ஆம் வினாக்களுக்கு விடைதருக..

A- காலிங்க சக்கரவர்த்திப் பெருமான் என்று தன்னை இனங்காட்டிக் கொள்ளல்

B – 1ஆம் விஜயபாகுவின் பின்னர் பொலன்னறுவையில் உறுதியான ஆட்சியை ஏற்படுத்தல்

31. கீர்த்தி ஶ்ரீ நிஸங்கமல்ல மன்னன் தொடர்பாக

1) A உம் B உம் உண்மையானவை 2) A உம் B உம் பொய்யானவை

3) A உண்மையானது என்பதோடு B பொய்யானது

4) A பொய்யானது என்பதோடு B உண்மையானது

32. மகா பராக்கிரமபாகு மன்னன் தொடர்பாக

1) A உம் B உம் உண்மையானவை 2) A உம் B உம் பொய்யானவை

3) A உண்மையானது என்பதோடு B பொய்யானது

4) A பொய்யானது என்பதோடு B உண்மையானது

- **பின்வரும் அட்டவணையை அவதானித்து 33ஆம், 34ஆம் வினாக்களுக்கு விடை தருக..**

| | | |
|---|---|---|
| A 4ஆம் மகிந்தன் | D கொண்டவட்டவான் கல்வெட்டு | G உயர் நிலங்களில் மரங்களை வெட்ட வேண்டாம் |
| B 3ஆம் உதயன் | E அனுராதபுரக் கல்வெட்டு | H அரசினால் அமுல் செய்யப்பட்டுள்ள சட்டங்களை பின்பற்றல் |
| C 5ஆம் காசியப்பன் | F புத்தன்னேஹெல கல்வெட்டு | I காட்டு மரங்களை வெட்ட வேண்டாம் |

33. 4ஆம் மகிந்த மன்னனோடு தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய விடைத்தொகுதி

(1) AD (2) BI (3) CD (4) EG

34. புத்தன்னேஹெலக் கல்வெட்டுடன் தொடர்புடைய விடயங்களை உள்ளடக்கிய விடை

(1) EG (2) BI (3) CD (4) AD

35. பண்டைய கல்வெட்டுக்களில் “ரஜமொஹால்” எனும் பெயரால் குறிப்பிடப்பட்ட குளத்தின் உறுப்பு

(1) மடைக்கதவு (2) கலிங்கற்றொட்டி (3) வெளிவான் கதவு (3) அலைதாங்கி

36. அனுராதபுர விகாரையில் வாழ்ந்த பிக்குகளுக்கு 200 தங்கக் கலங்கள் வழங்கியதாக கல்வெட்டில் குறிப்பிடப்படும் மன்னன்

(1) 4ஆம் காசியப்பன் (2) 1ஆம் சேனன் (3) மானவர்மன் (3) 5ஆம் காசியப்பன்

37. கி.பி 2ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த பாறைக் குறிப்பொன்றில் தனது நிலபுலங்களின் ஒரு பகுதியை பௌத்த விகாரைக்கு வழங்கியதாகக் குறிப்பிடப்பட்டுள்ள பெண்

(1) சூளசீவலிதேவி (2) விஹாரமஹாதேவி (3) அசோகமலா (4) தலுதா லஷ்மி

38. நாட்டில் நிலவிய சட்டங்கள் மற்றும் சட்டம் தொடர்பான நிறுவனங்கள் என்பவற்றைக் கல்வெட்டுக்களில் பொறிப்பித்த கி.பி 9ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மன்னன்

(1) 2ஆம் சேனன் (2) 1ஆம் சேனன் (3) மானவர்மன் (4) 2ஆம் காசியப்பன்

39. குற்றாவளியை பிடித்து ஒப்படைக்கும் வரை அக்குற்றவாளி வாழ்ந்த கிராம மக்களிடம் அறவிடப்பட்ட வரி

(1) உள்ளூர் தண்டப்பணம் (2) மாத்ரிக்க மத்சய பாகய

(3) ஆள்வரி (4) அடையாள வரி

40 கி.மு 1129ஆம் ஆண்டில் பெண்கள் தங்கள் கண்களுக்கு நிறந்தீட்டுவதற்கு பயன்படுத்திய உலோகக்கம்பி கண்டெடுக்கப்பட்ட இடம்

(1) கித்துள்கல பெலிலென (2) உடரஞ்சாமடம (3) பெரகல (4) ஹல்துமுல்ல

(40 X 2 = 80 புள்ளிகள்)